(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 36.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, செத்தெம்பர் 24, வெள்ளிக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0130/ '10

1.

கௌரவ ரொசான் ரணசிங்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005 ஆம் ஆண்டளவில் நாட்டில் செயற்படுத்தப்பட்ட கிராமிய மின் திட்டங்களின் பெயர்கள், அந்தந்த மாவட்டங்களின் அடிப்படையில் யாவையென்பதையும்,

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய மின் கருத்திட்டங்களின் பெயர்கள், ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் யாவையென்பதையும்,

(iii) அந்த ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் செலவு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) எதிர்காலத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள கிராமிய மின் திட்டங்கள் யாவை என்பதையும்,

(v) அதன் பொருட்டு செலவு செய்ய எதிர்பார்த்துள்ள தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0243/ '10

2.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்லை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய கட்டுவன கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்-

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா,

(iii) ஆமெனில் அது எவ்வளவு காலத்தினுள்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0295/ '10

3.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் மாத்திரம் அரசு பெற்றுள்ள மொத்த, வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறான கடன்கள் பெறப்பட்ட மூலங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் யாவையென்பதையும்,

(iii) பெறப்பட்ட கடன்களுக்காக உடன்பட்டுக்கொண்ட நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2009 ஆம் ஆண்டில் மாத்திரம் அரசினால் மீளச்செலுத்தப்பட்ட கடன்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(ii) அவ்வாறு வட்டியுடன் மீளச்செலுத்தப்பட்ட கடன்கள், பெறப்பட்ட மூலங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0304/ '10

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர, — பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போதைய தேர்தல்கள் ஆணையாளர் ஓய்வுபெறும் திகதி யாதென்பதையும்,

(ii) இவருடைய தற்போதைய சம்பளம் எவ்வளவென்பதையும்,

(iii) ஓய்வுபெற வேண்டிய வயதை தாண்டிய நிலையிலும் அவரைத் தொடர்ந்தும் பணியில் ஈடுபடுத்தியதன் மூலம் இடம்பெற்றுள்ள இவருடைய மனித உரிமை மீறல் தொடர்பாக நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பதினேழாவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழுவைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறெனில், அது எப்போதிருந்தென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0325/ '10

5.

கெரவ ரவி கருணாநாயக்க,— பொருதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முதலீட்டுச் சபையானது முன்னைய துல்கிரிய புடவை ஆலையின் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யுமுகமாக 2010.05.30 ஆம் திகதிய "சண்டே ஒப்சேவரில்" பீஓஐ/ஈஏ மற்றும் எஸ்பி/2010/09 என்ற குறியீட்டையுடைய விளம்பரமொன்றின் மூலமாக வினை மனுக்கள் கோரியிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) துல்கிரிய புடவை ஆலைத்தொகுதி கையளிக்கப்பட்ட நபரின் பெயரையும்,

(ii) கையளிக்கப்பட்ட இடம் பெற்ற திகதியினையும்,

(iii) அக்கொடுக்கல் வாங்கல்களின் விலையையும்,

(iv) இது ஓர் குத்தகையா அல்லது விற்பனையா என்பதையும்,

(v) குத்தகையாயின், அதன் நிபந்தனைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே கூறியவாறு கையளிக்கப்பட்ட காணியின் அளவு மற்றும் கட்டிடங்கள் என்பவற்றையும்,

(ii) கையளிக்கப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் பற்றிய விபரங்களையும்,

(iii) அது தொடர்பாக திறந்த விலைமனுக்கள் கோரப்பட்டிருந்ததா என்பதையும்,

(iv) ஆமெனில், விலைமனுக்கள் தொடர்பான விபரங்களையும்,

(v) இன்றேல், ஏன் விலைமனுக்கள் கோரப்படவில்லை என்பதையும்,

(vi) மேற்படி (ஆ) (iii) ன் மூலமாக கிடைத்த விலை எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல். ஏன்?

0342/ '10

6.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 'ஜி.எஸ்.பி.ப்ளஸ்' சலுகையின் கீழ் எமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்தி வகைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி உற்பத்திகள் ஏற்பறுமதி செய்யப்படும் நாடுகள் யாவையென்பதையும்,

(iii) உற்பத்திகளை அனுப்பும் போது வழங்கப்பட்ட வரிச்சலுகை எவ்வளவு என்பதையும்,

(iv) இச்சலுகை நீக்கப்பட்டால் இழக்கப்படும் தொழில்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) இக்காரணத்தால் இழக்கப்படும் தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரசு அந்நிய செலாவணியை ஈட்ட எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்பதையும்,

(ii) 'ஜி.எஸ்.பி.ப்ளஸ்' சலுகையை வழங்காத ஐரோப்பிய நாடுகளுக்கு உற்பத்திகளை அனுப்பும் போது ஏற்படும் நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

0356/ ' 10

7.

கௌரவ அஜித் பி. பெரேரா,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரகம பொது விளையட்டு மைதானம் உரித்தாயுள்ள அரச நிறுவனம் யாது என்பதையும்,

(ii) அவ்விளையாட்டு மைதானத்தின் பரப்பளவு யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானம் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும் தேசிய மட்டத்தில் நடத்துவதற்காக, அபிவிருத்தி செய்யக்கூடியளவு இடவசதியினைக் கொண்ட, உட்கட்டமைப்பு வசதிகளையுடைய ஓர் பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதையும்,

(ii) 400 மீற்றர் ஓடு பாதையினை நிர்மாணிக்கக்கூடிய, பண்டாரகம தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஒரே மைதானம் இதுவாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஒவ்வோர் ஆண்டிலும்,

(i) மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை,

(ii) அதில் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை,

(iii) மேல் மாகாண சபையினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை,

(iv) அதில் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை

எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) தற்போது அவ்விளையாட்டு மைதானம் எந்தவொரு விளையாட்டுப் போட்டியினையும் நடத்த முடியாத நிலையில் இருப்பதனால், அதனை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0372/ ’10

8.

கௌரவ நூர்தீன் மசூர்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியளவில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நிருவாக மாவட்டங்களில் முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தை அமுல்படுத்துவதற்காக, 1965ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க காதி நீதிமன்ற (நியமனங்களை செல்லுபடியாக்குதல்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருந்த காதி நீதிபதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அம்மாவட்டங்களில் மேற்கூறிய திகதியளவில் தாபிக்கப்பட்டிருந்த காதி நீதிமன்ற வலயங்கள் அல்லது ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

மாவட்ட மட்டத்தில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0401/ ‘10

9.

கௌரவ திலும் அமுணுகம,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஈ - கிராம கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்,

(iii) அதன் முன்னோடி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட மாகாணங்கள் யாவையென்பதையும்,

(iv) அதில் உள்ளடக்கப்பட்ட பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கிடைக்கப்பெற்ற உதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கருத்திட்டத்தை மேலும் விரிவாக நடைமுறைப்படுத்துவதற்கான எதிர்கால திட்டங்கள் உண்டா என்பதையும்,

(ii) அவ்வாறெனில், அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0426/ ‘10

10.

கௌரவ அசல ஜாகொடகே,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான, காலி மாவட்டத்தின் அக்மீமனையில் அமைந்துள்ள, வலகந்தூவ தோட்டத்தின் 19 ஹெக்டயர்கள் ரூபா. 21 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதற்குப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினது அங்கீகாரமும் அரச மதிப்பீடும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சட்ட ரீதியான விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையாயின் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யார் என்பதையும்,

(iii) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(iv) இதில் சட்ட ரீதியான முறையில் செயற்படாதிருந்திருப்பின், உடன்படிக்கையை இரத்துச் செய்து, அரசாங்கம் அத்தோட்டத்தை மீளப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0471/ ‘10

11.

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க பாடசாலைகளில் நிலவும் மௌலவி மற்றும் மௌலவியா ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கையையும்,

(ii) முன்னாள் கல்வி அமைச்சினால் 2009 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்,

(iii) சகல பாடசாலைகளிலும் நிலவும் மௌலவி மற்றும் மௌலவியா ஆசிரியர்களுக்கான சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அவர் துரித நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0244/ ’10

12.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்லை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய வலஸ்முல்லை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா,

(ii) ஆமெனில் மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா,

(iii) ஆமெனில் அது எவ்வளவு காலத்தினுள்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0331/ ‘10

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தொகை மதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 2002 ஆம் ஆண்டில் 04 பேரைக் கொண்ட குடும்பமொன்றின் மாதாந்த செலவு எவ்வளவு,

(ii) 2002 தொடக்கம் 2010 ஆம் ஆண்டுவரை அந்தச் செலவு ஒவ்வொரு வருடத்தின் ஒவ்வொரு மாதத்திலும் எவ்வளவு,

(iii) 2002 ஆம் வருடம் தொடக்கம் இதுவரை வருடாந்த தனிநபர் வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iv) 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணில் சராசரியாக செலுத்தப்பட்ட தொகை வருடாந்த ரீதியில் எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0384 / 10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலிமுகத் திடல் முதல் வெள்ளவத்தை வரை 500 ஏக்கர் காணியினை நிரப்புவதற்கானக சாத்தியக்கூற்று ஆய்வு தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது உண்மையா என்பதை அவர் இச் சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) சாத்தியக்கூற்று ஆய்வினை மேற்கொள்பவர் யார் என்பதையும்,

(ii) கடற்படுகையினை நிரப்புவதற்கான செலவினையும்,

(iii) அது சூழலைப் பாதிக்குமா என்பதையும்,

(iv) இதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் யார் என்பதையும்,

(v) இவ்வாறான கருத்திட்டத்தினைச் செய்வதன் நோக்கத்தினையும்,

(vi) இதற்கான கடனை மீளச் செலுத்துவதற்கான காலப்பகுதியினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

15.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய அங்குணுகொலபெலஸ்ஸ கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப் படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா,

(ii) ஆமெனில் மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா,

(iii) ஆமெனில் அது எவ்வளவு காலத்தினுள்,

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பி.டீ. வீரசிங்க த சில்வா.

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ. இரத்தினசபாபதி.

3.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வீ. நவரத்தினம்.

4.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எச். சந்ரமன் த சில்வா

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— குடியியல் வான்செலவு,— குடியியல் வான்செலவினது ஒழுங்குபடுத்துகைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அத்துடன் தொடர்பான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கும், சர்வதேசக் குடியியல் வான்செலவு மீதான சமவாயத்திற்குப் பயன்கொடுப்பதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்டவையும் அவற்றின் இடைநேர்விளைவானவையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

மாகாண சபைகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*4.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*5.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*6.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*7.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*8.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*9.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

பா. 36/ '10

10.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாராளுமன்ற சேவையின் சுயாதீனப்பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

பாராளுமன்றத்தின் சகல செயற்பரப்புகளிலும் பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை மேலும் வலுப்படுத்துவதற்காக விதந்துரைகள் செய்யப்படவுள்ளதால்,

பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

(அ) பாராளுமன்ற சேவையின் சுயாதீனப்பண்பை மேலும் வலுப்படுத்துவது; மற்றும்

(ஆ) இதனோடு தொடர்புடைய குழு கருதுகின்றவாறான ஏனைய விடயங்கள்.

(2) (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தெரிகுழு ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) குழுவானது பின்வரும் தத்துவமுடையதாதல் வேண்டும்,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயித்தல்,

(ஆ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை முழுமையாகக் கவனத்திற் கொள்வதற்கு அவசியமெனக் குழு கருதக்கூடியவாறாக, அதன் முன்னர் தோன்றும்படி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் தற்போதுள்ளவர்களான அல்லது முன்னாள் ஆளணியினரை கட்டளையிட்டழைத்தல், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி எவரேனுமொருவரைத் தேவைப்படுத்துதல், அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஏற்றல்,

(இ) குழுவுக்கு உதவிபுரிவதெற்கென இயைபான துறைகளிலான வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுதல்; அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் இடைக்கால அறிக்கைகளைச் செய்தல், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து நடாத்திச் செல்லல்.

(4) குழுவானது அத்தகைய எல்லாக் கருமங்களையும் கவனத்திற் கொண்டதன் மேல், குழு தாபிக்கப்பட்டதிலிருந்து ஐந்து (05) மாதங்களினுள் அல்லது, பாராளுமன்றம் அதன் தற்றுணிபின் பேரில் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியினுள் அதன் அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.